## நொச்சியாகம பிரதேச சபை
## அநுராதபுரம் மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 01 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 ஜுன் 09 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுலை 09 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நொச்சியாகம பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் நிதிக்கூற்று தயாரிக்கப்படுவதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளியிடப்படல் வேண்டும் | ஏற்றுக்கொள்கிறேன். |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | இஹலவெடியாவ நீர் வழங்கல் திட்டத்தின் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா. 4,195,768 ஆகவிருந்த போதும் வருமானச் செலவுக் கணக்கில் ரூபா. 4,223,262 எனக் காட்டப்பட்டிருந்தமையினால் ரூபா. 27,494 கூடுதலாகக் கணக்கிடப்பட்டிருந்தது. | சரியான பெறுமதிகள் கணக்குகள் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | சுரியான சிட்டையிடப்பட்ட பெறுமதியினை இட்டு இத் தவறினை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதிக் கடன் | மீளாய்வாண்டிற்கான வட்டி | இத் தவறினை நிவர்த்தி செய்வதற்கான |

| | | | |
|---|---|---|---|
| | மீதிகளுக்காக மீளாய்வாண்டில் கடன் வட்டி ரூபா. 878,359 செலவாகக் காட்டப்பட்டிருந்தது. | செலவாக வருமானச் செலவுக் கணக்கில் காட்டப்படல் வேண்டும். | நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டின் ஓய்வூதிய மற்றும் திரண்ட கொடுப்பனவு பெறுமதி இனங்காணப்பட்டு மீண்டெழும் செலவாக வருமானச் செலவுக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற் கான சகல செலவுகளும் கணக்கிடப்படல் வேண்டும். | மீளாய்வாண்டின் ஓய்வூதிய மற்றும் திரண்ட கொடுப்பனவு பெறுமதி மீண்டெழும் செலவாக வருமானச் செலவுக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை என்பதை உறுதி செய்கிறேன். |
| (iv) | மீளாய்வாண்டின் கணக்காய்வுக் கட்டணத்திற்கான நிதி ஒதுக்கப்படவில்லை. | நிதி ஒதுக்கப்பட வேண்டும். | சரியான பெறுமதி இனங்காணப்படாமை காரணமாக நிதி ஒதுக்கப்படவில்லை என்பதை தெரிவிக்கின்றேன். |
| (v) | உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டிற்காக செலுத்தப்படாதிருந்த கடன் தவணைகள் மற்றும் வட்டி ரூபா. 1,154,011 நடைமுறைப் பொறுப்பாக ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய தொகை கடன் கொடுத்தோராக க் காட்டப்படல் வேண்டும். | இத் தவறினை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (vi) | 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான வருடங்களுக்கான பெற வேண்டிய ரூபா. 3,999,265 முத்திரைக் கட்டணம் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படவில்லை. | சுரியான கணக்குகள் நிதிக்கூற்றுக்கள் மூலம் காட்டப்படல் வேண்டும். | இப் பேரேட்டினை மீண்டும் பரிசீலித்து உறுதி செய்து அவ் வருமானங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணம் ரூபா. 37,669 நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | மீளாய்வாண்டிற் கான சகல செலவுகளும் முறையாக கணக்கிடப்படல் வேண்டம். | இத் தவறினை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

## (இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (i) 2018 திசெம்பர் 31 ஆம் திகதியன்று 5 கணக்கு விடயங்கள் தொடர்பான இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்த மீதிகள் மற்றும் குறித்த பேரேடுகளின் அடிப்படையிலான மீதிகள் இடையே ரூபா. 3,447,720 வித்தியாசம் காணப்பட்டது. | குறித்த வித்தியாசங்கள் இணக்கம் செய்யப்பட்டு சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | ஏற்றுக்கொள்கிறேன். இத் தவறினை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) 2018 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ஐந்தொகையில் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா. 226,430,376 ஆகவிருந்த போதும் அதற்குச் சமாந்தரமாக காணப்பட வேண்டிய மூலதன உள்ளீட்டில் வருமானத்திற்காகப் பங்களிப்புச் செய்யும் கணக்கின் பெறுமதி ரூபா. 226,112,126 ஆகவிருந்தமையால் குறித்த கணக்குகளுக்கிடையில் ரூபா. 318,250 வித்தியாசம் காணப்பட்டது. | நிலையான சொத்து மீதி மூலதன உள்ளீட்டில் வருமானத்திற்காகப் பங்களிப்புச் செய்யும் கணக்கிற்குச் சமாந்தரமாக பேணப்படல் வேண்டும். | 2018 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா. 226,430,376 ஆகவிருந்தது. தவணை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட AAU – 1256 முச்சக்கர வண்டியின் தவணைக் கொடுப்பனவு இவ் வித்தியாசத்திற்குக் காரணமாகவிருந்தது. |

**(ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 05 வருடங்களுக்கு மேலாக காணப்பட்டு வருகின்ற ரூபா. 7,904,497 பெறுமதியான 02 கணக்கு மீதிகள் அறவிடப்பட்டிருக்க வில்லை. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சபைக்குச் சொந்தமான வியாபார நிலையங்கள் மற்றும் கடைகள் வாடகைக்கு விடல் மற்றும் சபைக்குச் சொந்தமான 05 வீடுகளை வாடகைக்கு விட்டதன் காரணமாக ஏற்பட்ட நிலுவையாகும். இது தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று 05 வருடங்கள் முதல் 21 வருடங்கள் வரையிலான காலப்பகுதியினுள் அறவிடப்படாது காணப்படுகின்ற 10 அரச சொத்துக்கள் மூலம் பெற வேண்டியிருந்த ரூபா. 592,375 பெறுமதியான வீத வரி அறவிடப்பட்டிருக்கவில் லை. | குறித்த நிறுவனங்கள் மூலம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆரச நிறுவனங்களில் காணப்படுகின்ற வீதவரி நிலுவை சம்பந்தமாக எழுத்து மூலமாக அறிவிப்பதற்கான நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான நிறுவனங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | 05 வருடங்களுக்கும் மேலாக நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டு வந்த மொத்தம் ரூபா. 3,622,818 ஆகவிருந்த செலுத்த வேண்டிய 04 மீதிகள் மீளாய்வாண்டில் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இவ் ஓய்வூதியம் மற்றும் திரண்ட கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய அதிகாரிகள் யார் என்பதை சரியாக இனங்காண முடியாததன் காரணமாக அக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் படவில்லை. முத்திரை வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் அருப்பு வரி ஆகிய செலுத்த வேண்டிய மீதிகள் 2019 ஆம் ஆண்டில் அந் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து உறுதி செய்யப்பட்டு எதிர்காலத்தில் செலுத்தப்படும். |

**(உ) கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் காணப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா. 14,470,756 ஆகவிருந்த 08 கணக்கு விடயங்களுடன் தொடர்பான விபரப் பேரேடு, வயது ஆய்வு, உறுதி செய்யும் கடிதங்கள் ஆகியன சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது அவை மகிழ்ச்சிகரமாக உண்மைப்படுத்த முடியாது போனது. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகளை உறுதி செய்வதற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | ஏதிர்காலத்தில் சமர்ப்பிப்பேன். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் வாகனச் சட்டம் 203 அதிகார சபை | சபைக்குச் சொந்தமான 05 வாகனங்கள் பதிவு செய்யப்படாது ஓட்டத்திற்காக விடப்பட்டிருந்தன. | சட்டத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | ஆவணங்களில் உள்ள தகவல்கள் முறனானவை |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| | (i) நிபி 189 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று சபையின் 02 கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த 06 மாதங்கள் தொடக்கம் 04 வருடங்கள் வரையிலான காலப்பகுதியிலிருந்து மாறாத 16 | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | 02 கணக்குகளிலும் மாறாத காசோலைகளின் எண்ணிக்கை 16 என்பதை நினைவு படுத்துகிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | காசோலைகள் தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | | |
| (ii) நி.பி 454(2) | பிரதேச சபையின் சகல கட்டடங்களினதும் மின்சார உபகரணங்கள் தொடர்பான ஆவணம் பேணப்பட்டிருக்கவில்லை | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | பிரதேச சபையின் சகல கட்டிடங்களினதும் மின்சார உபகரணங்கள் தொடர்பான ஆவணம் பேணப்பட்டிருக்கவில்லை. ஏதிர்காலத்தில் இவ்வாவணத்தைப் பேணுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) <u>பொது நிர்வாகச் சுற்றறிக்கை</u> | | | |
| (i) 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | கைவிரல் அடையாள இயந்திரம் பொருத்துதல் மற்றும் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினங்களில் சேவையாற்றும் பொழுது அச் சுற்றறிக்கையின் பிரகாரம் சேவைக்காலம் தீர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பரகாரம் செயற்படல் வேண்டும். | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 சுற்றறிக்கையின் பிரகாரம் கைவிரல் அடையாள இயந்திரத்தினைப் பொருத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ii) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 19 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் தகனம் தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | சபைக்குச் சொந்தமான வாகனங்களுக்கான 2018 ஆம் ஆண்டுக்கான எரிபொருள் தகனம் தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI2002/02 இலக்க திரைசேரி சுற்றறிக்கை | கணினி உபகரணங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்து பட்டியலொன்று பேணப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த உபகரணங்களுக்கான பட்டியல் பேணப்படல் வேண்டும். | கணினி உபகரணங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்து பட்டியலொன்று 2019 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தப்படும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,229,079 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,772,812 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,568,970 | 2,477,805 | 1,824,083 | 5,247,493 | 2,518,970 | 2,351,375 | 1,446,521 | 4,593,771 |
| (ii) | வாடகை | 6,455,300 | 3,863,580 | 3,518,130 | 7,736,557 | 5,752,300 | 7,270,823 | 6,619,523 | 7,391,107 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 16,995,700 | 6,299,480 | 6,248,120 | 5,828,761 | 20,623,900 | 7,195,655 | 5,373,326 | 5,777,401 |
| (iv) | வேறு வருமானங்கள் | 18,251,000 | 12,030,488 | 12,950,813 | 2,592,204 | 12,296,600 | 12,050,386 | 10,769,095 | 3,512,529 |
| | மொத்தம் | 44,270,970 | 24,671,353 | 24,541,146 | 21,405,015 | 41,191,770 | 28,868,239 | 24,208,465 | 21,274,808 |

#### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வுக் காலப்பகுதியினுள் விட்டையிடப்பட்ட வீதவரி அளவு ரூபா. 1,765,005 ஆகவிருந்த போதும் அறவிடப்பட்டிருந்தது 37 வீதமான ரூபா. 647,474 மாத்திரமாகவிருந்தது. எஞ்சிய நிலுவை வீதவரி ரூபா. 5,247,493 அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும் | நோச்சியாகம பிரதேச சபைக்குச் சொந்தமான கடைகள் வீதவரி மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இக்கடைகளில் வீதவரி அறவிடப்படாது வருடாந்த சிட்டைப்படுத்தலில் வீதவரி நிலுவையாக ஆவணங்களில் காட்டப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வீதவரி சம்பந்தமாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்கள் பிரகடனப்படுத்தப்படல் வேண்டும். | சட்டத்திற்கு அமைவாக செயற்பட வேண்டும் | வீதவரி அறவிடுவதற்காக அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்கள் வர்த்தமானிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் கிடைக்காத அதேவேளை அவ்வாவணங்களை எதிர்காலத்தில் தேடி எடுப்பதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 1988 மே 17 ஆம் திகதிய உள்ளூராட்சிப் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை இலக்கம் 1988/22 பிரகாரம் வரி அறவிடப்படும் பிரதேசங்களில் சொத்துக்கள் 5 வருடங்களுக்கு ஒரு முறையாவது மதிப்பிடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். | இவ்வருடத்தில் வீதவரியினை மீள் பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | 1987 பிரதேச சபைச் சட்டத்தின் 135 ஆம் பிரிவின் பிரகாரம் வீதவரி தொடர்பான பொது மதம் சார்ந்த, நன்மையான காரியங்கள், கல்வி சார்ந்த மற்றும் வீட்டு சுதந்திரமளித்தல் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | விடுவிக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்படல் வேண்டும். | விடுவிக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான பட்டியல் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சிட்டைப்படுத்தப்பட்ட கடை வாடகை மற்றும் வீட்டு வாடகை வருமானத்தில் ரூபா. 5,993,725 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகையை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சட்ட நடவடிக்கை மூலம் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 வேறு வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை பெற வேண்டிய முத்திரைக் கட்டணத் தொகை பிரதான செயலாளரினால் விசாரிக்கப்பட்டு தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்களைப் பேணுவதற்கும் வருமானம் சேகரிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | பெற வேண்டிய முத்திரை வரி பெறுமதியுடன் தொடர்பான பேரேடுகள் 2019 மே 16 ஆம் திகதி காணிப் பதிவாளர் காரியாலயத்திலிருந்து எமக்குக் கிடைக்கவில்லை. |
| (ஆ) | இஹலவெடியாவ, குகுல் கடுவ, ஹொருவில, நொச்சியாகம ஆகிய பிரதேசங்களில் நடாத்தப்பட்டு வருகின்ற நீர்ப் பாசனத் திட்டங்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியன்று பெற வேண்டியிருந்த நிலுவை ரூபா. 5,234,721 ஆகவிருந்தது. | நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந் நீர்ப் பாசனத் திட்டங்களுடன் தொடர்பான நிலுவைகளில் கூடிய தொகை நடப்பு வருடத்தில் மார்ச் மாதம் ஆகும்பொழுது அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையும் அறவிடுவதற்கான தேவையான பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் | இப் பிரிவின் பிரகாரம் சில உப விதிகள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஏனைய விடயங்கள் |

| | | |
|---|---|---|
| | | சம்பந்தமாகவும் புதிய உப விதிகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |

**(ஆ) செயற்பாட்டுத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்து அதனடிப்படையில் வருடாந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பில் பெற வேண்டிய அடைவுகள் தொடர்பில் அறிந்து வைத்திருக்கவில்லை. | இலக்குகள் குறிக்கப்பட்டு அவற்றை அடைவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பில் பெற வேண்டிய அடைவுகள் தொடர்பில் அறிந்து வைத்திருக்காத போதும் எதிர்காலத்தில் இலக்கு 5 அடிப்படையில் செயற்பட நடவடிக்கை எடுப்பேன். |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆரம்ப நிலை பதவிகள் 03 இற்கான 05 வெற்றிடங்களும் 04 பதவிகளுக்கான மேலதிக பணியாளர்கள் 04 பேரும் இடைநிலை பதவிகள் 03 இற்கான 06 வெற்றிடங்களும் காணப்படுவதுடன் அமைய பணியாளர்கள் 16 பேரும் இணைத்துக்கொள்ளப்பட்டுள் ளனர். | புணிக்குழு வெற்றிடங்களை நிவர்த்தி செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆமையப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள 16 பேரில் முன்பள்ளி ஆசிரியர் சேவை மற்றும் பம்பகங்களின் சேவைக்கான ஊழியர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். |

## 3.3 சொத்து முகாமைத்துவம்

### 3.3.1 பயன்பாடற்ற / குறை பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்குச் சொந்தமான மொத்தம் ரூபா. 1,905,850 பெறுமதியான 06 சொத்துக்கள் மற்றும் பெறுமதி இனங்காணப்படாத ஒரு சொத்து ஆகியன பயன்பாடற்றுக் காணப்பட்டன. | குறித்த சொத்துக்களை பயன்படுத்தவோ கையளிக்கவோ அல்லது ஒதுக்குவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்வுபகரணத் தொகுதி வடமத்திய பிரதான அமைச்சுக்குக் கிடைத்துள்ளதுடன் அவ்வமைச்சுடன் வைப்புச்செய்து ஏலவிற்பனைக் கணக்கிற்கு அல்லது மீண்டும் அவ்வமைச்சுக்குக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3.2 வருடாந்த பொருள் / இருப்பு மதிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் தொகை மதிப்பீட்டின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் நூலகத்தில் ரூபா. 93,922 பெறுமதியான 453 புத்தகங்கள் காணாமல் போயிருந்தன. | பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து நட்டத்தினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் புத்தக மதிப்பீட்டின் பிரகாரம் 36 புத்தகங்கள் இறாக்கைகளில் தவறியிருந்து கிடைக்கப்பெற்றுள்ளதுடன் எஞ்சிய புத்தகங்கள் நடமாடும் சேவையின் போது தவறவிடப்பட்டுள்ளன. 2019 ஆம் |

| | | |
|---|---|---|
| | | ஆண்டு மதிப்பீட்டிற்கு முன்னர் அப் புத்தகங்களை தேடி சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் |

**3.4 பெறுகைகள்**

----------------------

**பெறுகைத் திட்டம்**

-------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுவனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுவனவுத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும் | ஏற்றுக்கொள்கிறேன். 2019 ஆம் ஆண்டில் பெறுவனவு திட்டத்தினைத் தயாரித்து பெறுவனவு நடவடிக்கைகளை முறையாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

-------------------------------------------------------------------

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் செயற்படுத்தல்**

-----------------------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஜனவரி 28 ஆம் திகதிய DMA/2009(1)(i) இலக்க நிதி மற்றும் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை அமைத்து அதனடிப்படையில் 2019 பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி முதலாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடைபெற்றது. |